## சிறப்பு சார்பு நீதிமன்றம், (மோட்டார் வாகன விபத்து இழப்பீடு தீர்ப்பாயம்)
## திருப்பத்தூர், திருப்பத்தூர் மாவட்டம்
## MCOP . No. 183/2024

**நாள் : 13.02.2026**

**ம.சா.** 1 திரு.குமரேசன்

**1ஆம் எதிர்மனுதாரர் தரப்பு குறுக்கு விசாரணை**

விபத்து ஏற்படுத்திய ஜே சி பி வாகனத்தின் பதிவு எண் ஞாபகமில்லை. விபத்து செட்டியப்பனுர் அருகே நடந்தது. மேற்படி வாகனத்தை 1ஆம் எதிர்மனுதாரர் விபத்து நடந்த தேதிக்கு முன்பாகவே காட்பாடியை சேர்ந்த கருணாமூர்த்தி என்பவருக்கு விற்பனை செய்துவிட்டார் என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது. மேற்படி வாகனமானது 2ஆம் எதிர்மனுதாரரிடம் காப்பீடு செய்யப்பட்டுள்ளது என்றால் சரிதான். எனவே 1ஆம் எதிர்மனுதாரர் வாகனத்திற்கு 2ஆம் எதிர்மனுதாரர்தான் ஈட்டுறுதி ஏற்க கடமைப்பட்டவர் என்றால் சரிதான். நான் கருணாமூரத்தி என்பவரை தரப்பினராக சேர்ப்பதற்கு பதிலாக 1ஆம் எதிர்மனுதாரரரை கட்சி சேர்த்துள்ளேன் என்றால் சரியல்ல. நான் பதிவு சான்றிதழை பார்வையிட்டபோது 1ஆம் எதிர்மனுதாரரின் பெயரில்தான் பதிவு சான்றிதழ் வழங்கப்பட்டுள்ளதால் தரப்பினராக சேர்த்துள்ளேன். 1ஆம் எதிர்மனுதாரர் தரப்பில் தாக்கல் செய்யப்பட்ட எதிருரையிலயே மேற்படி விவரங்கள் குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். விபத்தினால் ஏற்பட்ட காயங்களுக்கு 2ஆம் எதிர்மனுதாரர் மட்டுமே இழப்பீடு கொடுக்க கடமைப்பட்டவர் என்றால் சரியல்ல. 1ஆம் எதிர்மனுதாரர் தனது வாகனத்தை கருணாமூர்த்திக்கு விற்றுவிட்டதால் எனக்கு எவ்வித இழப்பீடும் கொடுக்க கடமைப்பட்டவர் அல்ல என்றால் சரியல்ல.

**2ஆம் எதிர்மனுதாரர் தரப்பு குறுக்கு விசாரணை**

விபத்தில் இறந்துபோனவர் எனது மகன் என்றால் சரிதான். ஜே சி பி வாகனம் மோதிதான் விபத்து ஏற்பட்டதாக மனு தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான். விபத்து 09.02.2021 மாலை 7.45 மணிக்கு நடந்தது என்றால் சரிதான். ஜே சி பி வாகனத்திற்கு 10.02.2021 தேதியில்தான் இன்சூரன்ஸ

வழங்கப்பட்டுள்ளது என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது. விபத்து நடந்த மறுநாள் இன்சூரன்ஸ் எடுக்கப்பட்டுள்ளதால் 2ஆம் எதிர்மனுதாரர் நிறுவனம் எவ்வித நஷ்டஈடும் கொடுக்க வேண்டியதில்லை என்றால் சரியல்ல. சாட்சியிடம் ம.சா.ஆ.8, 9 ஆவணங்கள் காட்டப்பட்டு விபத்து நாளில் ஜே சி பி வாகனம் இன்சூரன்ஸ் செய்யப்படவில்லை என்றால் எனக்கு எழுத படிக்க தெரியாது என்று கூறுகிறார். எனது மகன் இஞ்சினியரிங் முடித்துவிட்டு சென்னையில் வேலை செய்து வந்தார், பால் வியாபாரம் செய்யவில்லை. எந்த நிறுவனம் என்று எனக்கு சொல்லத்தெரியவில்லை. விபத்திற்கு பின்னிட்டு வாணியம்பாடி அரசு மருத்துவமனையில் முதலுதவி அளித்து அடுக்கம்பாறைக்கு அனுப்பிவைத்தார்கள். அடுக்கம்பாறையில் சிகிச்சையில் இருந்தபோது இறந்துவிட்டார். நான் தாக்கல் செய்துள்ள ஆவணங்களில் மருத்துவமனைக்கு அழைத்து சென்ற சமயத்தில் இறந்துவிட்டதாக கண்டுள்ளது என்றால் சரியல்ல. எனக்கு ஒரு மகன், ஒரு மகள். எனக்கு 62 வயதாகிறது. என் மனைவியின் வயது 55. எனது மகன் இஞ்சினியரிங் படிப்பை முடித்ததை காட்டும் Degree certificate போடவில்லை என்றால் சரிதான். எனது மகன் மாதம் ரூ.75,000/– சம்பாதித்ததாக மனுவிற்காகவேண்டி சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. விபத்து சமயத்தில் ஜே சி பி வாகனத்தின் காப்பீடு அமலில் இல்லாததால் 2ஆம் எதிர்மனுதாரர் நஷ்டஈடு கொடுக்க கடமைப்பட்டவர் அல்ல என்றால் சரியல்ல. எனவே 2ஆம் எதிர்மனுதாரரை பொருத்து வழக்கு தள்ளுபடி செய்யத்தக்கது என்றால் சரியல்ல.

ஒம்/. J. நாகலட்சுமி @ விஜயராணி,
சிறப்பு சார்பு நீதிபதி (MACT),
திருப்பத்தூர்.